இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 41ஏ (1) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் நான்காவது அறிக்கை

2024 ஜூன் முதல் 2024 டிசம்பர் வரையிலான காலப்பகுதிக்கானது

உள்ளடக்கம்

1. அறிமுகம் 1

2. அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனம் 1

3. பேரவையின் கூட்டங்கள் 3

4. அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை 3

4.1 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உறுப்பினரொருவரை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை 3

4.2 பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு உறுப்பினரொருவரை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை 4

குறுந்தேர்வை முடித்ததன் பின்னர், குருந்தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை 2025.07.01 ஆம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க பேரவை தீர்மானித்தது. 5

4.3 பகிரங்க சேவை ஆணைகுழுவிலிருந்து உறுப்பினரொருவரை நீக்குவதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரை 5

4.4 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கான (CIABOC) பணிப்பாளர் தலைமை அதிபதியின் நியமனத்துக்கான பேரவையின் விதப்புரை 5

5. அரசியலைப்பின் உறுப்புரை 41இ இன் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ சனாதிபதியின் விதப்புரைகளுக்கான அனுமதி/ அனுமதியின்மை 7

5.1 பிரதம நீதியரசரின் நியமனம் 7

5.2 மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில்கடமையாற்றுவதற்கான நியமனம் 7

5.3 மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதிகளின் நியமனம் 8

5.3.1. மேல் நீதிமன்ற நீதிபதிகளான திரு. கே.எம்.ஜீ.எச். குலதுங்க, திரு. டி. தொடவத்த, திரு. ஆர்.ஏ. ரணராஜா மற்றும் சிரேஷ்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதி திரு. மஹேன் சி.எல்.பீ. கொபல்லவ ஆகியோரின் நியமனம் 8

5.3.2. மேல் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி திரு. கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் மேல் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதி திரு. ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோரின் நியமனம் 9

5.4. நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம் 9

5.4.1. உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ விஜித் கே. மலல்கொட, அவர்களின் ஓய்வுடன் ஏற்படும் வெற்றிடத்திற்காக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம் 9

5.4.2. கௌரவ பிரதம நீதியரசர், சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய அவர்களின் ஓய்வுடன் ஏற்படும் வெற்றிடத்திற்காக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிக்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம் 10

5.5. சட்டத்துறை தலைமையதிபதியின் நியமனம் 11

5.5.1. சட்டத்துறை தலைமை அதிபதியின் மீள் நியமனம் 11

5.5.2. சட்டத்துறை தலைமையதிபதியின் நியமனம் 11

5.6. **கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவியில் செயற்படுவதற்கான நியமனம்** 12

5.7. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிக்கான நியமனம் 12

5.7.1. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிக்கான பதிற்கடமை நியமனம்.. 12

6.1.1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர் பதவியின் நான்கு வெற்றிடப் பதவிகளுக்கான உறுப்பினர்களை நியமித்தல் 13

6.1.2. திரு. எச். எம். எம். பீ. ஜயவர்தன மற்றும் திரு. பி. எம். டபிள்யு. சம்பத் பெரேரா ஆகியோரின் இராஜினாமா காரணமாக ஏற்பட்ட இரு வெற்றிடங்களுக்கான காணாமறபோன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் உறுப்பினர்களின் நியமனம். 14

6.2. இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு உறுப்பினர் ஒருரின் நியமனம் 15

6.3. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் நியமனம் 15

6.4. பெண்கள் பற்றி தேசிய ஆணைக் குழுவிற்கான (NWC) உறுப்பினர்களின் நியமனம் 17

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களுக்கான வேண்டுகோள்களுக்கு நடவடிக்கை எடுத்தல் 18

8. பேரவை உறுப்பினர்களை பிரதிவாதிகளாக சுட்டிக்காட்டி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள்..... 19

1. அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் (இதனகத்துப் பின்னர் "அரசியலமைப்பு" என்றும் குறிப்பீடுசெய்யப்படும்) அரசியலமைப்புப் பேரவைக்கு (இதனகத்துப் பின்னர் "பேரவை" என்றும் குறிப்பீடுசெய்யப்படும்) அரசியலமைப்பு மற்றும் ஏனைய சட்டங்களால் வழங்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை புரியவும் மற்றும் நிறைவேற்றவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 41எ (1) உடன் இணங்கியொழுகி 2024 ஜூன் முதல் 2024 டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் புரியப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நடவடிக்கைகள் இந்த அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2. அரசியலமைப்புப் பேரவைக்கான உறுப்பினர்கள் நியமனம்

2024 ஆம் ஆண்டின் சனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து, அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, அரசியலமைப்பின் உறுப்புரை 41அ (1) (ஈ) இன் பிரகாரம், கௌரவ விஜித ஹேரத், பா.உ., அவர்களை கௌரவ சனாதிபதி நியமித்தார்.

அதற்கமைவாக, ஒன்பதாவது பாராளுமன்றம் கலைக்கப்படும் போது பேரவையின் ஆக்கஅமைப்பு பின்வருமாறு இருந்தது :-

- கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன, அரசியலமைப்புப் பேரவையின் தவிசாளர்
- கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய, பிரதம அமைச்சர்
- கௌரவ சஜித் பிரேமதாச
- கௌரவ விஜித ஹேரத்
- கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்
- கௌரவ கபீர் ஹஷீம்
- கலாநிதி பிரதாப் ராமானுஜம்
- டாக்டர் தில்குஷி அனுலா விஜேசுந்தர
- கலாநிதி தினேஷா சமரரத்ன

2024 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து மற்றும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க, அரசியலமைப்புப் பேரவையின் தற்போதைய உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்பட்டனர்:-

✓அரசியலமைப்பின் உறுப்புரை 41அ(1)(ஈ) இன் பிரகாரம், பாராளுமன்றச் பேரவை முதல்வர், கௌரவ பிமல் ரத்நாயக்க பா.உ., அவர்களை கௌரவ சனாதிபதி நியமித்தார்;

✓அரசியலமைப்பின் உறுப்புரை 41அ(1)(உ)(i) இன் பிரகாரம் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையோரின்

உடன்பாட்டின்மீது கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ., அவர்களை பேரவையின் உறுப்பினரொருவராக கௌரவ சனாதிபதி பெயர் குறித்து நியமித்தார்;

✓எதிரக் கட்சித் தலைவர் உள்ளடங்கும் அரசியல் கட்சி அல்லது சுயாதீன குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையின் இணக்கத்துடன் அரசியலமைப்பின் உறுப்புரை 41அ(1)(உ)(ii) இன் பிரகாரம், கௌரவ அஜித் பி. பெரேரா பா.உ., அவர்களை பேரவையின் உறுப்பினரொருவராக கௌரவ சனாதிபதி பெயர் குறித்து நியமித்தார்; மற்றும்

✓அரசியலமைப்பின் உறுப்புரை 41அ(1)(ஊ) இன் பிரகாரம், அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவை எதிர்க்கட்சித் தலைவர் சேர்ந்துள்ளாரோ அந்த அரசியற்கட்சி அல்லது சுயேட்சைக் குழுவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்த, பாராளுமன்ற உறுப்பினர்களின் உடன்பாட்டின் மீது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கௌரவ சிவஞானம் சிறீதரன், பா.உ. அரசியலமைப்புப் பேரவையின் உறுப்பினராக கௌரவ சனாதிபதியினால் நியமிக்கப்பட்டார்.

அதன்பிரகாரம் தற்போதைய அரசியலமைப்புப் பேரவையின் ஆக்கவமைவு பின்வருமாறு காணப்படுகிறது:-

- கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன, பா.உ., சபாநாயகர் மற்றும் அரசியலைப்புப் பேரவைத் தவிசாளர்
- கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய, பா.உ., பிரதம அமைச்சர்
- கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
- கௌரவ பிமல் ரத்நாயக்க, பா.உ.
- கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா, பா.உ.
- கௌரவ அஜித் பி. பெரேரா, பா.உ.
- கௌரவ சிவஞானம் சிறீதரன், பா.உ.
- கலாநிதி பிரதாப் ராமானுஜம்
- டாக்டர் தில்குஷி அனுலா விஜேசுந்தர
- கலாநிதி தினேஷா சமரரத்ன

3. பேரவையின் கூட்டங்கள்

மீளாய்வின் கீழுள்ள காலப்பகுதியின் போது பின்வரும் நாட்களில் 16 சந்தர்ப்பங்களில் அரசியலமைப்புப் பேரவை கூடியது:-

2024.06.04, 2024.06.10, 2024.06.18, 2024.06.26, 2024.07.09, 2024.07.11, 2024.07.26, 2024.08.06, 2024.08.21, 2024.09.03, 2024.10.08, 2024.10.22, 2024.11.08, 2024.11.15, 2024.12.20 மற்றும் 2024.12.31

4. அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை

4.1 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு உறுப்பினரொருவரை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு. சரத் காமினி டி சில்வாவின் மறைவினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்தைத் தெரிவிக்கும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரின் தொடர்பாடலை பேரவை கருத்திற்கொண்டது.

அதன்படி, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்காகப் பரிசீலிக்கப்படுவதற்கு ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் பத்திரிகை விளம்பரமொன்றை பேரவை பிரசுரித்தது. விளம்பரத்தைத் தொடர்ந்து, நகல்கள், முழுமையற்றவை மற்றும் வடிவமைப்பின் பிரகாரம் இல்லாத விண்ணப்பங்கள் உள்ளடங்கலாக மொத்தம் எண்பத்தி நான்கு (84) விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதனைக் கவனத்திற்கொண்டதன்பின், அடிப்படை உரிமை மீறல்களுடன் தொடர்புடைய ஏதாவது நிலுவையிலுள்ள வழக்குகள் அல்லது குற்றவாளியாகியுள்ளாரா போன்றன தொடர்பாக விண்ணப்பதாரரிடமிருந்து ஒரு பாதகமற்ற பதிலைப் பெறுவதற்கு உட்பட்டு திரு. ஜயந்த ஆனந்த ஜயசிங்க அவர்களை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக

நியமிக்கப்படுவதற்கு விதப்புரைசெய்ய 2024 ஆகஸ்ட் 21 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டது. பேரவை, விண்ணப்பதாரரிடமிருந்து ஒரு பாதகமற்ற அறிக்கையைப் பெற்றதன் பின், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக திரு. ஜயந்த ஆனந்த ஜயசிங்க அவர்களை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை கௌரவ சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

4.2 பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு உறுப்பினரொருவரை நியமிப்பதற்கான பேரவையின் விதப்புரை

அரசியலமைப்பின் உறுப்புரை 54 (4) இன் பிரகாரம் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு. சந்திரரத்ன பல்லேகமவின் இராஜினாமாவை கௌரவ சனாதிபதி ஏற்றுக்கொண்டதைத் பேரவைக்குத் தெரிவித்து சனாதிபதியின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தொடர்பாடலை பேரவை கருத்திற்கொண்டது.

அதன் பிரகாரம், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்காகப் பரிசீலிக்கப்படுவதற்கு ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரும் பத்திரிகை விளம்பரமொன்றை பேரவை பிரசுரித்தது. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஆக்கவமைவுடன் தொடர்புடைய அரசியலமைப்பின் உறுப்புரை 54 (1) இன் ஏற்பாடுகள் தொடர்பாக பேரவை கவனம் செலுத்தியது. விளம்பரத்தைத் தொடர்ந்து, காலங்கடந்த, நகல்கள், முழுமையற்றவை மற்றும் குறிப்பிடப்பட்ட வடிவமைப்பின் பிரகாரம் இல்லாத விண்ணப்பங்கள் உள்ளடங்கலாக மொத்தம் நூற்று நான்கு (104) விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

பேரவை, கலந்தாலோசனையின் பின்னர் இந்த நியமனத்திற்கான தெரிவுச் செயன்முறையொன்றினை ஏற்றுக்கொண்டது.

குறுந்தேர்வை முடித்ததன் பின்னர், குருந்தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களை 2025.07.01 ஆம் திகதி நேர்முகப்பரீட்சைக்கு அழைக்க பேரவை தீர்மானித்தது.

4.3 பகிரங்க சேவை ஆணைகுழுவிலிருந்து உறுப்பினரொருவரை நீக்குவதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரை

அரசியலமைப்பின் உறுப்புரை 54(4) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பகிரங்க சேவை ஆணைகுழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து, பகிரங்க சேவை ஆணைகுழுவின் உறுப்பினர் திரு. என்.எச்.எம். சித்ரானந்த அவர்களை நீக்குவதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரைக்காக பேரவையின் அனுமதியினைக் கோரி அப்போதைய சனாதிபதியின் செயலாளரிடமிருந்து பொது நிருவாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண பேரவைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நடாத்தப்பட்ட பூர்வாங்க விசாரணைகளுடன் தொடர்புடைய ஆவணங்களுடன் பெறப்பட்ட தொடர்பாடலை பேரவை கருத்திற்கொண்டது.

இது தொடர்பாக கௌரவ சட்டத்துறை தலைமையதிபதியின் கருத்தையும் பேரவைபெற்றுக்கொண்டது.

கௌரவ சட்டத்துறை தலைமையதிபதியின் கருத்தைப் பெற்றதைத் தொடர்ந்து, அரசியலமைப்பின் உறுப்புரை 54(4) இன் ஏற்பாடுகளின்

பிரகாரம் திரு. என்.எச்.எம். சித்ரானந்த அவர்களை பகிரங்க சேவை ஆணைகுழுவின் உறுப்பினர் பதவியிலிருந்த நீக்குவதற்கான அப்போதைய சனாதிபதியின் விதப்புரை தொடர்பாக தற்போதைய சனாதிபதி கௌரவ அனுர குமார திசாநாயக்கவின் நிலைப்பாட்டை விளக்கமளிக்க பேரவை 2024 ஒக்டோபர் 08 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானித்ததுடன் மேலும் கௌரவ சனாதிபதியின் கவனத்துக்காக கௌரவ சட்டத்துறை தலைமையதிபதியின் கருத்தின் பிரதியொன்றை அனுப்புவதற்கும் தீர்மானித்தது.

4.4 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கான (CIABOC) பணிப்பாளர் தலைமை அதிபதியின் நியமனத்துக்கான பேரவையின் விதப்புரை

2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச்

சட்டத்திற்கிணங்க இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செ ய்வதற்கான ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவியிலிருந்து திரு. டபிள்யூ. கே. டி. விஜேரத்னவின் பதவி விலகளுடன் உருவான வெற்றிடத்தைத் தொடர்ந்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற் கான ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவிக்கான நியமனத்துக்கு விதப்புரை செய்வதற்குப் பொருத்தமான நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு பேரவை 2024 ஒக்டோபர் 08 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் தீர்மானித்து பத்திரிகை விளம்பரத்தைப் பிரசுரித்தது.

2024 ஒக்டோபர் 22 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் தலைமையதிபதியின் நியமனத்துக்கான பொருத்தமான விதப்புரையின் தெரிவுச் செயன்முறை தொடர்பாக சட்ட நிபுணர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு பேரவை தீர்மானித்தது. அதன்பிரகாரம், பொருத்தமான விதப்புரையின் தெரிவுச் செயன்முறை மற்றும் தெரிவுச்செயன்முறையின் போது கருத்திற்கொள்ளப்படவேண்டிய முக்கியமான சட்ட அம்சங்கள் தொடர்பாக நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி புவனேக அலுவிகாரே (ஓய்வுபெற்ற) மற்றும் சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் தலைமையதிபதி சனாதிபதி சட்டத்தரணி திரு. விராஜ் தயாரத்ன ஆகியோரிடமிருந்து பேரவை சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொண்டது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கான பணிப்பாளர் தலைமை அதிபதியின் நியமனத்துக்கான பொருத்தமான விதப்புரையின் தெரிவில் பின்பற்றப்படவேண்டிய செயன்முறைகள் மீதான தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் சட்ட நிபுணர்களின் கருத்துகள் கருத்திற்கொள்ளப்பட்டதன் பின்னர், தெரிவுக்கான அளவுகோல்கள் மற்றும் நடைமுறைகளை பேரவை ஏற்றுக்கொண்டது. அதன்பிரகாரம், தெரிவுச் செயன்முறையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள அளவுகோல்களை அடிப்படையாகக்கொண்டு பதினாறு விண்ணப்பதாரிகள் குறுந்தேர்வு செய்யப்பட்டதுடன் அதில் பத்துப்பேர் மாத்திரமே நேர்முகப்பரீட்சகர்கள் குழாமுக்கு முன்னால் சமுகமளித்தனர். கலந்துரையாடலின் பின்னர், பேரவை, 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் நேர்முகப்பரீட்சைகள் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றைப் பரிசீலிப்பதற்குத் தீர்மானித்தது.

5. அரசியலைப்பின் உறுப்புரை 41இ இன் ஏற்பாடுகளின் கீழ் கௌரவ சனாதிபதியின் விதப்புரைகளுக்கான அனுமதி/ அனுமதியின்மை

5.1 பிரதம நீதியரசரின் நியமனம்

2024.12.02 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தற்போதுள்ள பிரதம நீதியரசர் கௌரவ ஜயந்த சந்திரசிறி அவர்களின் ஓய்வுடன் வெற்றிடமாகவுள்ள பிரதம நீதியரசர் பதவிக்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (1) மற்றும் 107 இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம்.என்.பி. பெர்னாண்டோ அவர்களை நியமிப்பதற்கு கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை பேரவை 2024 நவம்பர் 15 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் கருத்திற்கொண்டது.

உயர் நீதிமன்ற நீதிபதி சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம்.என். பி. பெர்னாண்டோ அவர்கள் தற்பொழுது உயர் நீதிமன்றத்திலுள்ள மிகசிரேட்ட நீதிபதி என்பதை பேரவை கருத்திற்கொண்டு 2024.12.02 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் தற்போதுள்ள பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ ஜயந்த சந்திரசிறி ஜயசூரிய அவர்களின் ஓய்வுடன் வெற்றிடமாகவுள்ள பிரதம நீதியரசர் பதவிக்கு உயர் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதியாகிய சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம். என். பி. பெர்னாண்டோ அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை அனுமதிப்பதற்கு ஏகமானதாகத் தீர்மானித்தது.

5.2 மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவியில் பதில்கடமையாற்றுவதற்கான நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் கௌரவ என்.பி.பி.டீ.எஸ். கருணாரத்ன வெளிநாட்டுப் பயணமொன்றைத் திட்டமிட்டுள்ள 2024.08.09 ஆம் திகதியிலிருந்து 2024.09.03 ஆம் திகதிவரையான காலப்பகுதியின் போது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பதவியில் பதில்கடமையாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ ஆர்.எம். சோபித ராஜகருணா அவர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (2) மற்றும் 109 (1) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை பேரவை கருத்திற்கொண்டது.

அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (4) இன் ஏற்பாடுகளுடன் இணங்கிப் பெற்றுக்கொள்ளப்பட்ட கௌரவ பிரதம நீதியரசரின்

கருத்துக்களைப் பேரவை கருத்திற்கொண்டது. அதன்பிரகாரம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் கௌரவ என்.பி.பி.டீ.எஸ். கருணாரத்ன வெளிநாட்டுப் பயணமொன்றைத் திட்டமிட்டுள்ள 2024.08.09 ஆம் திகதியிலிருந்து 2024.09.03 ஆம் திகதிவரையான காலப்பகுதியின் போது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பதவியில் பதில்கடமையாற்றுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கௌரவ ஆர்.எம். சோபித ராஜகருணா அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையினை அனுமதிப்பதற்கு, பேரவை, 2024 ஜூன் 18 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானித்தது.

5.3 மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நீதிபதிகளின் நியமனம்

5.3.1. மேல் நீதிமன்ற நீதிபதிகளான திரு. கே.எம்.ஜீ.எச். குலதுங்க, திரு. டி. தொடவத்த, திரு. ஆர்.ஏ. ரணராஜா மற்றும் சிரேஷ்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதி திரு. மஹேன் சி.எல்.பீ. கொபல்லவ ஆகியோரின் நியமனம்

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வெற்றிடமான பதவிகளுக்கு நியமிப்பதற்காக மேல் நீதிமன்ற நீதிபதிகளான திரு. கே.எம்.ஜீ.எச். குலதுங்க, திரு. டி. தொடவத்த, திரு. ஆர். ஏ. ரணராஜா மற்றும் சிரேஷ்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதி திரு. மஹேன் சி.எல்.பீ. கொபல்லவ ஆகியோரை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (1) இன் கீழ் கௌரவ சனாதிபதியிடமிருந்துபெறப்பட்ட விதப்புரைகளை பேரவை கருத்திற்கொண்டது.

அரசியலமைப்பின் உறுப்புரை 41இ (4) இன் ஏற்பாடுகளுடன் இணங்கிப் பெற்றுக்கொள்ளப்பட்ட கௌரவ பிரதம நீதியரசரின் கருத்துகளையும் பேரவை கருத்திற்கொண்டது.

விதந்துரைக்கப்பட்டுள்ள மூன்று நீதிபதிகளும் மேல் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதிகளாவர் எனப் பேரவை அவதானித்ததுடன் கௌரவ சனாதிபதியினால் விதந்துரைக்கப்பட்டுள்ள நான்கு பெயர்குறித்த நியமத்தர்களையும் நியமிப்பதற்கு கௌரவ பிரதம நீதியரசரின் உடன்பாட்டையும் அவதானித்தது.

அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41இ உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வெற்றிடமாகவுள்ள நீதிபதிப் பதவிகளுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. எம். ஜீ. எச். குலதுங்க, மேல் நீதிமன்ற நீதிபதி,

திரு. டி. தொடவத்த, மேல் நீதிமன்ற நீதிபதி. திரு. ஆர். ஏ. ரணராஜா மற்றும் சிரேஷ்ட பிரதி மன்றாடியார் தலைமையதிபதி திரு. மஹேன் சி. எல். பீ. கொபல்லவ, ஆகியோரை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரைகளை பேரவை அதன் 2024 செப்டெம்பர் 03 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரித்தது.

5.3.2. மேல் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி திரு. கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் மேல் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதி திரு. ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோரின் நியமனம்

வெற்றிடமான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிப் பதவிகளுக்காக மேல் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி திரு. கே. எம். எஸ். திசாநாயக்க மற்றும் மேல் நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதிபதி திரு. ஆர். பி. ஹெட்டியாராச்சி ஆகியோரை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் 41இ(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கௌரவ சனாதிபதியின் விதப்புரைகளை பேரவை 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பரிசீலித்தது.

அரசியலமைப்பின் 41இ(4) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க கௌரவ பிரதம நீதியரசரின் கருத்துக்களைப் பெறுவதற்கு பேரவை தீர்மானித்ததுடன் பேரவையின் பரிசீலனைக்காக சனாதிபதியின் செயலாளரிடமிருந்து நியமத்தர்களின் முறையாக இற்றைப்படுத்தப்பட்ட சுயவிபரக்கோவை ஒன்றைப் பெறுவதற்கும் பேரவை மேலும் தீர்மானித்தது.

5.4. நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம்

5.4.1. உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ விஜித் கே. மலல்கொட, அவர்களின் ஓய்வுடன் ஏற்படும் வெற்றிடத்திற்காக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம்

2024.08.26 ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ விஜித் கே. மலல்கொட அவர்களின் ஓய்வுடன் வெற்றிடமாகவுள்ள நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம். என். பீ. பர்ணாந்து அவர்களை

நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையை 2024 ஆகஸ்ட் 21 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பேரவை பரிசீலித்தது.

சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம். என். பீ. பர்ணாந்து, உயர் நீதிமன்றத்தின் அதிசிரேட்ட நீதிபதி ஆவார் என்பதை பேரவை கவனத்தில்கொண்டது. அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41 இ மற்றும் 111 ஈ உறுப்புரைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து நியமத்தரின் சுயவிபரக்கோவையினை பரிசீலித்த பின்னர் உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ விஜித் கே. மலல்கொட, அவர்களின் ஓய்வுடன் நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பதவிக்கு உயர் நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம். என். பீ. பர்ணாந்து அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையை அங்கீகரிப்பதற்கு பேரவை ஏகமனதாகத் தீர்மானித்தது.

5.4.2. கௌரவ பிரதம நீதியரசர், சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய அவர்களின் ஓய்வுடன் ஏற்படும் வெற்றிடத்திற்காக நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவிக்கான உறுப்பினர் ஒருவரின் நியமனம்

கௌரவ பிரதம நீதியரசர், சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய அவர்கள் ஓய்வு பெறல் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி, சனாதிபதி சட்டத்தரணி கௌரவ எம். என். பீ. பர்ணாந்து அவர்கள் 2024.12.02 ஆம் திகதி பிரதம நீதியரசராக நியமனம் பெறுவதோடு நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவில் ஏற்படவுள்ள வெற்றிடத்திற்கு உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ பீ. பீ சூரசேன அவர்களை நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையை பேரவை பரிசீலித்தது.

உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ பீ. பீ சூரசேன அவர்கள் உயர் நீதிமன்றத்தில் தற்போதுள்ள அதிசிரேட்ட நீதிபதி ஆவார் என்பதை பேரவை கவனத்தில் கொண்டது. அதற்கமைவாக, அரசியலமைப்பின் 41 இ மற்றும் 111 ஈ உறுப்புரைகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து நியமத்தரின் சுயவிபரக்கோவையினை பரிசீலித்த பின்னர், உயர் நீதிமன்ற நீதிபதி கௌரவ பீ. பீ சூரசேன அவர்களை நீதித்துறைச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிப்பதற்கான கௌரவ சனாதிபதியின் விதப்புரையை பேரவை 2024 டிசம்பர் 20 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரித்தது.

5.5. சட்டத்துறை தலைமையதிபதியின் நியமனம்

5.5.1. சட்டத்துறை தலைமை அதிபதியின் மீள் நியமனம்

2024.06.27 முதல் 2024.12.31 வரையான காலப்பகுதிக்காக 2024.06.27 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் ஓய்வுபெறவிருந்த சட்டத்துறை தலைமையதிபதி, திரு. எஸ். ராஜரத்னம், ஜனாதிபதி சட்டத்தரணி, அவர்களை மீள நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை 2024 ஜூன் 04 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பரிசீலித்தது. பரிசீலித்ததன் பின்னர், கட்டாய ஓய்வூதிய வயதை அடைந்ததன் பின்னர் சட்டத்துறை தலைமையதிபதியின் மீள் நியமனம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் பற்றியும் கட்டாய ஓய்வூதிய வயதை அடைந்ததன் பின்னர் சட்டத்துறை தலைமையதிபதியின் பதவிக்கு நியமிக்கப்படுகின்ற ஆட்கள் பற்றிய கடந்த கால முன்நிகழ்வு உள்ளிட்ட மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டப் பின்னணி ஆகியவை பற்றி சட்டத்துறை தலைமையதிபதியிடமிருந்து விரிவான அறிக்கை ஒன்றை பேரவை நாடியது.

2024 ஜூன் 18 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தில், நீண்டநேரம் கலந்துரையாடியதன் பின்னர், அரசியலமைப்பின் 41ஈ உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியதாக கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை பற்றி தீர்மானிப்பதற்காக பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய வாக்கினை அளித்ததுடன், அதற்கமைவாக, 2024.06.27 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் ஓய்வுபெறவிருந்த சட்டத்துறை தலைமையதிபதி, திரு. எஸ். ராஜரத்னம், ஜனாதிபதி சட்டத்தரணி, அவர்களை 2024.06.27 முதல் 2024.12.31 வரையான காலப்பகுதிக்காக, மீள நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரை பேரவையால் அங்கீகரிக்கப்படவில்லை.

5.5.2. சட்டத்துறை தலைமையதிபதியின் நியமனம்

2024.07.12 ஆம் திகதி செயற்படும் வண்ணம் சட்டத்துறை தலைமையதிபதியின் வெற்றிடமான பதவிக்கு சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், திரு. கே. ஏ. பி. ரணசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களை நியமிப்பதற்கு அரசியலமைப்பின் 41 இ உறுப்புரையின் பிரகாரம் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை பரிசீலித்தது.

2024 ஜூலை 11 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தில், பரிசீலித்ததன் பின்னர், அரசியலமைப்பின் 41 இ உறுப்புரையின் பிரகாரம் சட்டத்துறை தலைமையதிபதி பதவிக்கு சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், திரு. கே. ஏ. பி. ரணசிங்க, ஜனாதிபதி சட்டத்தரணி அவர்களை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

5.6. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பதவியில் செயற்படுவதற்கான நியமனம்

கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. டபிள்யு. பி. சி. விக்ரமரத்ன வெளிநாட்டிற்கு பிரயாணம் செய்வதற்கு திட்டமிட்டுள்ள காலப்பகுதியில் 2024.12.08 முதல் 2024.12. 22 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. ஜீ. எச். டி. தர்மபால அவர்களை நியமிப்பதற்காக அரசியலமைப்பின் 41 இ உறுப்புரையின் பிரகாரம் கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை பரிசீலித்தது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இந்த நியமத்தர் மிக மூத்த அலுவலர் ஆவார் என்பதை குழு கவனத்தில் கொண்டது. அதற்கமைவாக, நியமத்தரின் சுயவிபரக்கோவையினை பரிசீலித்த பின்னர், 2024 நவம்பர் 08 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் கூட்டத்தில், கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. டபிள்யு. பி. சி. விக்ரமரத்ன அவர்கள் வெளிநாட்டிற்கு பிரயாணம் செய்ய திட்டமிட்டிருக்கும் காலப்பகுதியில் 2024.12.08 ஆம் திகதி முதல் 2024.12.22 ஆம் திகதி வரை கணக்காய்வாளர் தலைமையதிபதிப் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி திரு. ஜீ. எச். டி. தர்மபால அவர்களை நியமிப்பதற்காக கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை அங்கீகரிப்பதற்கு பேரவை ஏகமனதாகத் தீர்மானித்தது.

5.7. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிக்கான நியமனம்

5.7.1. பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவிக்கான பதிற்கடமை நியமனம்

உயர் நீதிமன்றத்தின் 67/24, 68/24, 71/24, 72/24, 75/24, 80/24, 82/24 மற்றும் 84/24 ஆம் இலக்க மனுக்கள் மீதான 2024.07.24 ஆம் திகதியிடப்பட்ட உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை அடிப்படையாகக் கொண்டு சொல்லப்பட்ட உயர் நீதிமன்ற மனுக்களின் இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை, 2024.10.10 ஆம் திகதி செயற்படும் வண்ணம் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிசுப்

பரிசோதகர் தலைமையதிபதி திரு. டபிள்யு. எல். ஏ. எஸ் பிரியந்த அவர்களை நியமிப்பதற்காக அரசியலமைப்பின் 41இ (2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பேரவையின் அங்கீகாரத்தை நாடி கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை, 2024.10.08 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பரிசீலித்தது.

கலந்துரையாடலின் பின்னர், உயர் நீதிமன்ற மனுக்கள் 67/24, 68/24, 71/24,72/24,75/24, 79/24, 80/24, 82/24 மற்றும் 84/24 ஆகியவற்றின் இறுதித் தீர்மானம் வழங்கப்படும் வரை 2024.10.10 ஆம் திகதி செயற்படும் வண்ணம் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் பதவியில் செயற்படுவதற்கு சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி திரு. டபிள்யு. எல். ஏ. எஸ். பிரியந்த அவர்களை நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் விதப்புரையை பேரவை ஏகமனதாக அங்கீகரித்தது.

6. அரசியலமைப்பிற்கு அப்பால் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தால் பேரவைக்கு சுமத்தப்படக்கூடிய அல்லது குறித்தொதுக்கப்படக்கூடிய கடமைகளை புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும்

6.1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (காஆஅ) உறுப்பினர்களின் நியமனம்

6.1.1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர் பதவியின் நான்கு வெற்றிடப் பதவிகளுக்கான உறுப்பினர்களை நியமித்தல்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலக உறுப்பினர் பதவியின் நான்கு வெற்றிடப் பதவிகளுக்கான நியமனத்திற்காக விதந்துரைக்கப்படுவதற்கு பொருத்தமான தனியாட்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கான பத்திரிகை விளம்பரம் ஒன்றை பேரவை வெளியிட்டது. விளம்பரத்தைத் தொடர்ந்து நகல்கள், பூரணப்படுத்தப்படாத மற்றும் பிந்திக் கிடைத்த விண்ணப்பங்கள் உட்பட மொத்தமாக நூற்றி ஏழு (107) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்ட வருடத்தில் இருந்து இன்று வரை, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஒட்டுமொத்த செயலாற்றுகை மற்றும் 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற் போன

ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளின் நிறைவேற்றுதல்) சட்டத்தின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கைகள் தொடர்பான அறிக்கை ஒன்றையும் பேரவை காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திலிருந்து பெற்றது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளின் நிறைவேற்றுதல்) தொடர்பான சட்டத்தின் 4 மற்றும் 7(1) ஆம் பிரிவுகளுக்கு அமைவாக திரு. மகேஷ் கடுலந்த, திரு. தம்பையா யோகராஜா மற்றும் திருமதி சித்தி டேன் அர்பா தாசிம் ஆகியோரின் மீள்நியமனத்தை விதப்புரைப்பதற்கு, பேரவையின் பெரும்பான்மையினர் 2024 ஜூன் 18 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில், நீண்ட பரிசீலனையின் பின்னர் தீர்மானித்துடன்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் ஒருவராக டாக்டர் உபுல் அஜித் குமார தென்னக்கோன் அவர்களை விதப்புரைப்பதற்கும் பேரவை ஏகமனதாகத் தீர்மானித்தது.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 4 (1)(ஆ) ஆம் பிரிவிற்கு அமைவாக, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் தவிசாளராக நியமிக்கப்படுவதற்கு திரு. மகேஷ் கடுலந்த அவர்களை விதந்துரைப்பதற்கும் பேரவை தீர்மானித்தது.

6.1.2. திரு. எச். எம். எம். பீ. ஜயவர்தன மற்றும் திரு. பி. எம். டபிள்யு. சம்பத் பெரேரா ஆகியோரின் இராஜினாமா காரணமாக ஏற்பட்ட இரு வெற்றிடங்களுக்கான காணாமறபோன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் உறுப்பினர்களின் நியமனம்.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு. எச். எம். எம். பீ. ஜயவர்தன மற்றும் திரு. பி. எம். டபிள்யு. சம்பத் பெரேரா ஆகியோரது

இராஜினாமாக் காரணமாக குறித்த அலுவலகத்தில் ஏற்பட்டிருந்த இரு வெற்றிடங்கள் தொடர்பாக பேரவைக்கு அறிவித்து, ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட தொடர்பாடல் ஒன்றை குழு பரிசீலித்தது.

இதன் பிரகாரம் 2024 .11.08 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பேரவையானது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் அலுவலகத்தின் உறுப்பினர்களை நியமிப்பதற்கு சிபாரிசு செய்யப்படக்கூடிய பொருத்தமான தனி நபர்கள் இடம் இருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு ஒரு பத்திரிகை

விளம்பரத்தை பிரசுரிக்க தீர்மானித்தது. பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தை தொடர்ந்து, நகல் பிரதிகள், தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள், முழுமையாக பூர்த்தி செய்யப்படாதவைகள் உள்ளடங்கலாக மொத்தம் நூற்றியிருபது (120) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

6.2. இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்திற்கு உறுப்பினர் ஒருரின் நியமனம்

இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் ஒருவராக சேவையாற்றிய மேஜர் ஜெனரல் டபிள்யூ. பி. பி. பர்ணாந்து அவர்களின் பதவிக்காலம் முடிவடைந்தமையின் நிமித்தமாக இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் வெற்றிடம் ஒன்று ஏற்பட்டிருப்பதை பேரவை அவதானித்தது. இழப்பீட்டிற்கான அலுவலகத்தின் தவிசாளரால், டபிள்யூ. பி. பி. பர்ணாந்து அவர்கள் தனது பதவி காலத்தின் பொழுது அலுவலகத்திற்கு ஆற்றிய பணி, நியாயமான பங்களிப்புகளை கவனத்தில்கொண்டு அவரை மீள நியமிக்குமாறு சிபாரிசு செய்துள்ளதாக பேரவைக்கு தெரிவிக்கப்பட்டது. கலந்துரையாடல்களின் பின்னர், பேரவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் அறிக்கைகளை பெற்றுக் கொண்டதுடன், அதனைத் தொடர்ந்து இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தில் உறுப்பினர் ஒருவராக இருக்கையில் டபிள்யூ. பி. பி. பர்ணாந்துவினால் ஆற்றப்பட்ட பங்களிப்புகள் மற்றும் வகிபாகத்தின் முழு விபரம் ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

கலந்துரையாடலின் பின்னர், 2024 ஜூலை 26 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பேரவை இதனைப் பரிசீலித்ததுடன் ஒரு பெரும்பான்மை தீர்மானத்தின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலக சட்டத்தின் 4 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இழப்புக்கான எதிரீடுகள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினராக மேஜர் ஜெனரல் டபிள்யூ. பி. பி. பர்ணாந்துவை நியமிப்பதற்கு விதந்துரைத்தது.

6.3. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் நியமனம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பதற்கு பேரவையின் உடன்பாட்டை நாடி, 2024 ஜூலை 26 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் 2024.07.15 திகதியிட்ட கௌரவ நிதி, பொருளாதார

உறுதிப்பாடுகள், தேசியக் கொள்கைகள் அமைச்சரிடம் இருந்து வந்த தொடர்பாடலை பேரவை பரிசீரித்தது. நியமனங்கள் பரிசீலிக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதி தேர்தல் இடம் பெற்றதுடன் குறித்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும் மாற்றமடைந்திருந்தார்.

அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள், தேசியக் கொள்கைகள் அமைச்சரினால் செய்யப்பட்ட விதப்புரையை தற்போதைய நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் உல்லாச பயணத்துறை அமைச்சர் உறுதிப்படுத்துவாரா என சரிபார்த்துக் கொள்ள பேரவை தீர்மானித்தது.

இதன் பிரகாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கான பேரவையின் உறுப்பினர்களாக பேராசிரியர் கே. பி. எல். சந்திரலால், பேராசிரியர் டப்ளியு.டி.ஏ.எஸ் ரொட்ரிகோ, கலாநிதி (திருமதி) எம். சி. எஸ். பர்ணாந்து, திரு. பி. ஹேனநயக்க மற்றும் நீதிபதி டப்ளியு.ஏ. கழுஆராச்சி ஆகியோரை நியமிப்பதற்காக பேரவையின் உடன்பாட்டை கோரிய கௌரவ நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் உல்லாச பயணத்துறை அமைச்சரிடம் இருந்து 2024.11.08 ஆம் திகதி இடப்பட்ட தொடர்பாடல் பேரவைக்கு கிடைக்கப்பெற்றது.பேரவையால் மேலே குறிப்பிட்ட நியமத்தர்களை பரிசீலிப்பிற்காக ஒரு கலந்துரையாடலுக்கு பேரவை அழைப்பு விடுத்தது.

பரிசீலனையின் பின்னர், இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர் கே. பி. எல். சந்திரலால், பேராசிரியர் டப்ளியு.டி.ஏ.எஸ் ரொட்ரிகோ, கலாநிதி (திருமதி) எம். சி. எஸ். பர்ணாந்து, திரு. பி. ஹேனநயக்க, நீதிபதி டப்ளியு.ஏ. கழுஆராச்சி ஆகியோரை நியமிப்பதற்கு 2002 ஆம் ஆண்டின் 35 இலக்க இலங்கை தேசிய பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 3 (1) மற்றும் 6 (5) பிரிவின் பிரகாரம் கௌரவ நிதி பொருளாதார அபிவிருத்தி, கொள்கை உருவாக்கம், திட்டமிடல் மற்றும் உல்லாச பயணத்துறை அமைச்சரினால் செய்யப்பட்ட நியமிப்புகளுக்காக மேற்படி சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் உடன்படும் வகையில் உரிய நியமத்தர்களினால் சத்திய கடதாசிகள் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 2024 நவம்பர் 15ஆம் தேதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பேரவையினால் ஏகமனதான உடன்பாடு எட்டப்பட்டது.

நீதிபதி டபிள்யூ. ஏ. கழுஆராச்சி மற்றும் பேராசிரியர் டபிளியூ. டி. ஏ. எஸ். ரோட்ரிகோ ஆகியோரின் நியமனங்களினை ஏற்றுக் கொள்ளாமை நிமித்தமாக ஏற்பட்ட இலங்கை பொது பயன்பாடுகள் ஆணை குழுவின் உறுப்பினர் பதவிகளில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, திரு. டபிள்யூ. ஆர். த மெல் மற்றும் திரு. ரி. பீ. அபயசேகர ஆகியோரை நியமிப்பதற்கு பேரவையின் உடன்பாட்டினை நாடி கௌரவ நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரிடமிருந்து, 2024. 12. 22 ஆம் திகதியிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொடர்பாடலை பேரவை பரிசீரித்தது. கலந்துரையாடல்களின் பின்னர், 2024 டிசம்பர் 31 ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பேரவை, நியமத்தர்களுக்கு கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுக்க தீர்மானித்ததுடன், 2002 ஆம் ஆண்டு 35 இலக்க இங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சட்டத்தின் பிரிவு 5 இல் வேண்டப்பட்டதன் பிரகாரம் நியமத்தர்களிடமிருந்து சத்தியக் கடசாதிகளை பெற்றுக் கொள்வதற்கு மேலும் தீர்மானித்தது.

6.4. பெண்கள் பற்றி தேசிய ஆணைக் குழுவிற்கான (NWC) உறுப்பினர்களின் நியமனம்

2024 ஆம் ஆண்டு 37 இலக்க பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் பெண்கன் பற்றிய தேசிய ஆணைக் குழுவை தாபிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஒரு தொடர்பாடலை பேரவை பரிசீலித்தது.

மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களின் நியமனத்திற்காக விண்ணப்பங்கள் / நியமனங்களை கோருவதற்கு ஒரு பத்திரிகை விளம்பரத்தை பிரசுரிப்பதற்கு 2024.12.20ஆம் திகதி இடம்பெற்ற அதன் கூட்டத்தில் பேரவை தீர்மானித்தது.

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்களுக்கான வேண்டுகோள்களுக்கு நடவடிக்கை எடுத்தல்

மீளாய்வு செய்யப்படும் காலப்பகுதியின் பொழுது 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பின்வரும் எண்ணிக்கையில் வேண்டுகோள்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் சுட்டிக்காட்டப்பட்டவாறாக பதில்களும் அனுப்பப்பட்டிருந்தன .

பெற்றுக் கொள்ளப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை	2
முழுமையாக அல்லது பகுதியாக தகவல் வழங்கப்பட்ட வேண்டுகோள்கள்	2
மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்க வேண்டுகோள்கள்	0
மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1
பதிலளிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	1
நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0

8. **பேரவை உறுப்பினர்களை பிரதிவாதிகளாக சுட்டிக்காட்டி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மனுக்கள்**

i. SC FR 317/2023
ii. SC FR 318/2023
iii. SC FR 319/2023
iv. SC FR 04/2024
v. V. SC FR 06/2024
vi. SC FR 12/2024
vii. SC FR 14/2024
viii. SC FR 67/2024
ix. SC FR 75/2024
x. X. SC FR 80/2024
xi. xi. SC FR 71/2024
xii. xii. SC FR 72/2024
xiii. xiii. SC FR 79/2024
xiv. xiv. SC FR 82/2024
xv. XV. SC FR 68/2024
xvi. xvi. SC FR 84/2024
xvii. xvii. SC FR 35/2024
xviii. xviii. SC FR 105/2024
xix. xix. SC FR 110/2024
xx. XX. SC FR 113/2024
xxi. xxi. SC FR 137/2024